அரசியல் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள சிறுபான்மையினருக்கான உரிமைகளைச் சிதைக்கிறது ஒன்றிய அரசு! தமிழ்நாடு முதல்வரின் அறிவுரை பெற்று –

# உச்சநீதிமன்றத்தில் வக்பு வாரியச் சட்டத்தை உடைத்தெறிவோம்!

## நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கையையொட்டி – புதுடெல்லியில் ஆ.இராசா எம்.பி. பேட்டி!

**புதுடெல்லி, பிப். 15-**

**நாடாளுமன்றக் கூட்டுக்குழு அறிக்கையையொட்டி புதுடெல்லியில் நேற்று முன்தினம், செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த ஆ.இராசா எம்.பி., "அரசியல் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள சிறுபான்மையினருக்கான உரிமைகளைச் சிதைக்கிறது ஒன்றிய அரசு! என்றும்" "தமிழ் நாடு முதல்வரின் அறிவுரை பெற்று - உச்சநீதிமன்றத்தில் வக்பு வாரியச் சட்டத்தை உடைத்தெறிவோம்!" என்றும் குறிப்பிட்டார்.**

புதுடெல்லியில் நேற்று முன்தினம் (13.2.2025) ஆ.ராசா எம்.பி. அளித்த பேட்டி வருமாறு:-

வக்ஃப் வாரிய சட்டத் திருத்த மசோதாவின் மீதான நாடாளுமன்ற நிலைக் குழுவின் அறிக்கையை இன்றைக்கு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் தாக்கல் செய்தார்கள். நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் பணிகளை, அது நடந்து கொண்ட முறையை, அதில் நாடாளுமன்ற உறுப்பினர்களை பேச வைத்து அவர்களின் கருத்துகளைப் பதிவு செய்த முறையிலேயே எங்களுக்கு முரண்பாடு இருந்தது என்பதை அவ்வப்போது நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் நாங்கள் பதிவு செய்திருக்கிறோம்.

உதாரணமாக, இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்த கூட்டுக் குழு, இறுதியாக சென்ற மாதத்தில் பாட்னா, கல்கத்தா மற்றும் லக்னோ ஆகிய 3 தலைநகரங்களில் பல்வேறு குழுக்களை சந்தித்தது. இஸ்லாமிய குழுக்கள், இந்துக் குழுக்கள், சட்டவியல் நிபுணர்கள், வக்ஃப் வாரிய நிர்வாகிகள் அத்தனை பேரையும் சந்தித்தோம். அவ்வாறு சந்தித்து, அந்த 3 மாநிலங்களின் தரப்பட்ட சாட்சியங்களை எழுத்துப்பூர்வமாக தெரிவித்து நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் அவர்கள் 15 நாட்கள் கால அவகாசம் அளித்திருந்தார்கள். ஆனால், அந்தக் கால அவகாசம் முடிவதற்கு முன்பாகவே - எங்களுக்கு அந்தச் சாட்சியங்களை அனைத்தையும் எழுத்துப்பூர்வமாக தராமலேயே - நாடாளுமன்ற குழுவைக் கூட்டி ஒவ்வொரு பிரிவாக விவாதிக்காமல் - எங்களை அல்லாமலேயே - வேகமாக, ஒருதலைப்பட்சமாக இந்த மசோதாவிற்கு வாக்கெடுப்புவிட்டு, அவர்கள் எவ்வாறு எல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்பினார்களோ, அப்படிப்பட்ட ஒரு மசோதாவை இன்றைக்கு குழு அறிக்கையோடு தாக்கல் செய்திருக்கிறார்கள்.

### எதிர்மறைக் கருத்துகள்!

அந்தக் குழு அறிக்கை தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாகவே, சட்டபூர்வமாக நாடாளுமன்ற விதிமுறைகளின்படி, நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு, எங்களுடைய எதிர் கருத்துரையை தருவதற்கு உரிமை இருக்கிறது. அதன்படி நாங்களும் தந்தோம். அவ்வாறு நாங்கள் தந்த எதிர்மறை கருத்துக்களில், அதில் சில பகுதிகளை நீக்குவதற்கு தலைவருக்கு காரணமில்லாமல் உரிமை இல்லை. ஒருவேளை அவ்வாறு சரியான காரணம் இருந்து, நாங்கள் கொடுத்த எதிர்ப்புரையை - சில பத்திகளை - சில வரிகளை நீக்க வேண்டுமேயானால், எங்களுக்கு அறிவிப்பு கொடுக்க வேண்டும். இந்தப் பகுதிகளை நான் எடுக்கிறேன்; இது சட்டபூர்வமாக சரியாக இல்லை; நீங்கள் வேண்டுமென்றே உள்நோக்கத்தோடு எழுதியிருக்கிறீர்கள் என்று எங்களுக்கு அறிக்கை தர வேண்டும்; நோட்டீஸ் தர வேண்டும்.

ஆனால், அவ்வாறான எந்த சட்ட நடைமுறையும் கடைப்பிடிக்காமல், நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் மெத்தப் படித்து, தீர ஆராய்ந்து, இந்தந்த சட்டப் பிரிவுகளுக்கு எங்களுடைய எதிர் சட்ட உரையை தருகிறோம் என்று எழுத்துப்பூர்வமாக தந்ததில், எங்களைக் கேட்காமலேயே பல பகுதிகளை நீக்கி இருக்கிறார்கள். அது எங்களுக்கு நேற்றுதான் தெரிய வந்தது. உடனடியாக இன்றைக்கு நாடாளுமன்றத்தின் அவைத் தலைவர் - சபாநாயகர் அவர்களை சந்தித்து, உரிய காரணம் இல்லாமல் - முகாந்திரம் இல்லாமல், எங்களுடைய எதிர் கருத்துக்களை நீக்கி இருக்கிறார். இது சட்டப்படி தவறு என்று சொன்ன நேரத்தில், மாண்புமிகு சபாநாயகர் உண்மையை உணர்ந்து துறைச் செயலாளரையும், நாடாளுமன்ற செயலாளரையும் அழைத்து, "ராஜா உள்ளிட்ட மற்ற உறுப்பினர்கள் குழுவாக வந்திருக்கிறார்களே... இவர்கள் கொடுக்கும் கோரிக்கை சரியாக இருந்தால், அதை நிறைவேற்றுங்கள்" என்று சொன்னார்கள். நாங்கள் என்னென்ன பகுதிகள் எல்லாம் நீக்கி இருக்கிறார்கள் என்று சொன்னோம். தவறுதான் என்று நாடாளுமன்றக் குழுவின் செயலாளரும், நாடாளுமன்றத்தின் Secretary General-உம் ஒப்புக் கொண்டார்கள். அவ்வாறு ஒப்புக் கொண்டதற்கு பிறகும், அரசின் சார்பில் அதற்கான ஒப்புதல் தரப்படவில்லை என்று நாங்கள் அறிய வந்தோம். எங்களுக்கு சபாநாயகரால் அளிக்கப்பட்ட உத்தரவாதம் கூட ஒன்றிய அரசால் மறுதளிக்கப்பட்டிருக்கிறது.

150-க்கும் மேற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், இன்றைக்கு நாடாளுமன்றத்தின் 'Well' என்று சொல்லப்படும் உள்பகுதியில் குரல் எழுப்பி, நாங்கள் இன்றைக்கு முழக்கமிட்டோம். இந்தச் சட்ட மசோதா முற்றிலுமாக தவறு. அந்த நடைமுறைகள் எல்லாம் தவறு என்று நாங்கள் சத்தமிட்டோம். அதற்கு ஆளுங்கட்சி தரப்பில் இருந்து வந்த ஒரே குரல், 'பாரத் மாதா கி ஜே'. நாங்கள், சிறுபான்மை மக்களை - தலித் மக்களை - மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களை ஏன் இப்படி செய்கிறீர்கள்? அரசியல் சட்டத்தில் அவர்களுக்கு வழங்கப்பட்ட உரிமைகளை ஏன் மறுக்கிறீர்கள்? என்று நாங்கள் கேட்ட கேள்விக்கு, கோஷத்திற்கு அவர்களுடைய பதில் 'பாரத் மாதா கி ஜே'. அப்படியென்றால், இந்த பாரதம் - இந்த இந்தியா அவர்களுக்கு மட்டும்தானா? சிறுபான்மை மக்களுக்கு இல்லையா? கிறிஸ்தவர்களுக்கு, முஸ்லிம்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இல்லையா? என்ற வினாவை எழுப்புவதற்கு இன்றைக்கு அவர்களே ஒரு காரணமாக இருந்திருக்கிறார்கள்.

அதைவிட மிகக் கொடுமை... நாடாளுமன்றக் குழுவிற்கு அளிக்கப்பட்ட அறிக்கையில் நீக்கப்பட்ட பகுதிகளை சேர்ப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று உள்துறை அமைச்சர் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் எழுந்து சொல்கிறார். அப்படியென்றால், சேர்க்காமல் விட்டதற்கு காரணம் இவர்கள்தான் என்பதை, 'பூனை குட்டி வெளியே வந்து விட்டது', 'எங்கப்பன் குதிருக்குள்ளே இல்லை' என்று சொல்வார்களே, அதுபோன்று, இன்றைக்கு உள்துறை அமைச்சர் எழுந்து எங்களுக்கு ஆட்சேபனை இல்லை சேர்த்துக் கொள்ளுங்கள் என்றால், இதுவரை ஆட்சேபனை செய்தது யார்? நீங்கள் தானே என்கின்ற வினா எழுகிறது. இப்போதும் அதை சேர்க்கிறார்களா? எவ்வளவு தூரம் சேர்க்கப்போகிறார்கள்? என்று உத்தரவாதம் தரப்படவில்லை.

சபாநாயகர் பிற்சேர்க்கையில் சேர்க்கப்போகிறேன் என்கிறார். சிறுபான்மை மக்களுக்கு - இந்திய மக்களுக்கு - அரசியல் சட்டத்தில் நம்பிக்கை உள்ள அனைவருக்கும் நாங்கள் வேண்டுவது, ஒரு அறிக்கையை தருகிறார்கள். அந்த அறிக்கைக்கு நாங்கள் எதிர் கருத்து தருகிறோம். அதையும் இணைக்கிறார்கள். அதிலிருந்து சில பகுதிகளை எடுத்துவிடுகிறார்கள். நாங்கள் கோஷம் போட்டதற்கு பிறகு - நாங்கள் கேள்வி கேட்டதற்கு பிறகு, தன்னிச்சையாக வேறு ஒரு இணைப்பில் இணைக்கிறோம் என்று சொல்கிறார்கள். படிப்பவர்களுக்கு எவ்வாறு புரியும்? இந்த நாட்டு மக்களுக்கு இந்த அறிக்கையின் நம்பகத்தன்மை - வெளிப்படைத் தன்மை எவ்வாறு புரியும்?

### கேலிக் கூத்தான அரசாங்கம்!

இப்படிப்பட்ட ஒரு கேலிக்கூத்தான செயல் இன்றைக்கு மக்களவையில் நிறைவேறியிருக்கிறது. அதை எதிர்த்து இன்றைக்கு நாடாளுமன்றத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்து வெளிநடப்பு செய்திருக்கிறோம். எனவே, நாடாளுமன்ற முடக்கப்பட்டு, அதற்கு மேலும் தொடர இயலாமல், முழு நாடாளுமன்றமும் இன்றைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

### பேட்டி!

**கேள்வி:** மக்களவையில் வெளிநடப்பு செய்திருக்கிறீர்கள். மாநிலங்களவையில் நாடாளுமன்ற அமைச்சர் எதுவுமே நீக்கப்படவில்லை என்று ஒரு கருத்தை சொல்லியிருக்கிறாரே?

**பதில்:** இந்த அரசாங்கம், ஒரு கேலிக்கூத்தான அரசாங்கம் என்பதற்கு உண்மை அதுதான். அதாவது, நாடாளுமன்ற குழு அறிக்கை வைக்கிறபோது, அதில் நாங்கள் கொடுத்த எதிர் உரையில் 60 சதவீதத்தை எடுத்து விட்டார்கள். இதை நாங்கள் மக்களவைத் தலைவரோடு பேசிக் கொண்டிருக்கும்போதே, மாநிலங்களவையில் நாடாளுமன்ற விவகாரத் துறையின் அமைச்சர், நாங்கள் எதையும் நீக்கவில்லை என்கிறார். நீக்கப்பட்டதை சேர்ப்பதற்கு எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்று உள்துறை அமைச்சர்; அதேநேரத்தில், அடுத்த அவையில் என்ன சொல்கிறார்கள் என்றால், நாங்கள் எதையும் நீக்கவில்லை என்கிறார்: நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர் அப்துல்லா அவர்களும், அவரோடு இணைந்த காங்கிரஸ் கட்சியின் மற்ற உறுப்பினர்களும் எழுந்து "நீக்கப்பட்ட பகுதியை சேருங்கள்" என்று சொல்லும்போது, "நாங்கள் நீக்கவே இல்லை" என்று அமைச்சரே சொல்கிறார். இதைவிட ஒரு முரண்பாடு, - கேலிக் கூத்து - இந்த அரசாங்கம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதற்கு வேறு எந்த சாட்சியங்களும் தேவையில்லை. இவ்வாறு ஒரு மோசமான, கேவலமான அரசாங்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### ஜனநாயகப் படுகொலை!

இன்னும் சொல்லப்போனால், நாடாளுமன்ற மேலவையின் தலைவர் - குடியரசுத் துணைத் தலைவர் என்ன சொல்கிறார் என்றால், தவறான தகவலை அப்துல்லா அளித்துவிட்டார். எனவே, அவரை இடை நீக்கம் செய்யப் போகிறேன் என்கிற அளவிற்கு பேசிவிட்டார். ஆனால் அதற்குப் பிறகுதான் அவருக்கு தெரிகிறது, அவர் எடுத்த முடிவுதான் தவறு; அப்துல்லா சொன்னது சரி என்று. அப்போது, ஒரு நாடாளுமன்றத்திலேயே தவறான தகவலை நாடாளுமன்றத்தின் விவாகரத்துறை அமைச்சரே சொல்லுகிறார் என்றால், அவருக்கு கிடைத்த செய்தி உள்துறை அமைச்சருக்கு கிடைக்கவில்லையா? அல்லது உள்துறை அமைச்சர் இவருக்கு போதுமான புரிதலை தரவில்லையா? எங்கு கம்யூனிகேஷன் கேப்? ஆள் ஆளுக்கு ஒன்று சொல்கிறார்கள். நாங்கள் யாரை நம்புவது? சபாநாயகர் ஒன்று சொல்கிறார்; உள்துறை அமைச்சர் ஒன்று சொல்கிறார்; இன்னொரு அவையில் நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஒன்று சொல்கிறார்; இதற்கு நிர்மலா சீத்தாராமன் அவர்கள், "இதற்குப் பிறகும் உங்களுக்கு சந்தேகமா? அமைச்சரே சொல்லிவிட்டார்" என்று வக்காலத்து வாங்குகிறார். வக்காலத்து வாங்குவது உண்மையா? நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் சொல்வது உண்மையா? உள்துறை அமைச்சர் சொல்வது உண்மையா? சபாநாயகர் சொல்வது உண்மையா? எது உண்மை? எது பொய்? இவ்வாறு ஒரு மோசமான நிர்வாகம் இன்றைக்கு நாடாளுமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்றால், நாடாளுமன்றத்தின் இறையாண்மை - நாடாளுமன்றத்தின் தன்னிச்சையான நடவடிக்கைகள் இன்றைக்கு முற்றிலுமாக ஆளுங்கட்சியால் முடக்கப்பட்டிருக்கிறது என்பது வெள்ளிடைமலையாக இன்று தெரிகிறது. இப்படிப்பட்ட மோசமான ஜனநாயகப் படுகொலையை - அரசியல் சட்டத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை - நாடாளுமன்ற நடைமுறைகளின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை சுதந்திர இந்தியாவில் எந்த அரசும் செய்திருக்க முடியாது.



**கேள்வி:** நான்கு விதமான கருத்துகளை அவர்கள் சொல்கிறார்கள். நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் ஒன்று சொல்கிறார்; உள்துறை அமைச்சர் ஒன்று சொல்கிறார்; மக்களவை சபாநாயகர் ஒன்று சொல்கிறார்; நான்கு விதமான கருத்துக்கள் இந்த விவகாரத்தில் வரும்போது, யாருக்கு அதிகாரம் இருக்கிறது என்பதை அவர்கள் பார்க்கிறார்களா? இல்லை, அரசே ஒரு குழப்பத்தில் இருக்கிறது என்பதை காட்டுகிறதா?

**பதில்:** உண்மையிலேயே, அரசே குழப்பத்தில்தான் இருக்கிறது. பல பேருக்கு நீக்கினார்களா? நீக்க வில்லையா? என்றே தெரியவில்லை. அதை யாரைக் கேட்டு நீக்கினார்கள் என்றும் தெரியவில்லை. இன்றைக்கு உள்துறை அமைச்சர், இந்த அரசு என்ன மாதிரியான அரசு என்பதை ஒப்புக் கொண்டார்.

### மினி பார்லிமெண்ட்!

என்ன சொல்கிறார் என்றால், நீக்கப்பட்ட பகுதிகளை சேர்ப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்கிறார். ஆட்சேபனை இல்லை என்று சொல்வதற்கு இவர்கள் யார்? நாடாளுமன்ற நிலைக்குழு என்பது மினி பார்லிமெண்ட். நாடாளுமன்றத்தில் விவாதிக்க முடியாத காரணத்தால் - நேரமின்மை காரணத்தால் ஒரு சின்ன பார்லிமெண்ட் அமைத்திருக்கிறார்கள். அந்த சின்ன பார்லிமெண்ட் தன்னிச்சையாகதான் இயங்க வேண்டும். அப்போது, உள்துறை அமைச்சரை கேட்டுதான் நீங்கள் இயங்கினீர்களா? இன்றைக்கு வந்துவிட்டது அல்லவா... எங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றால், உங்களின் ஆட்சேபனையை யார் கேட்டார்? அவர்கள் கேட்டிருக்கக் கூடாது. சபாநாயகர்தான் முடிவெடுத்திருக்க வேண்டும். சபாநாயகர் யாருக்கு கட்டுப்பட்டவர்? உள்துறை அமைச்சருக்கு கட்டுப்பட்டவர். அவ்வாறு என்றால், நாடாளுமன்றம் அவருக்கு கட்டுப்பட்டிருக்கிறது. நாடாளுமன்றம் செயல்துறைக்கு கட்டுப்பட்டதா? நாடாளுமன்றம் அமைச்சரவைக்கு கட்டுப்பட்டதா? என்று நான் கேட்கிறேன். அமைச்சரவைதான் நாடாளுமன்றத்திற்கு கட்டுப்பட்டிருக்கிறது.

Any decision taken by the Government or any decision taken by the Cabinet must be placed it before the Parliament for approval. இவர்களே ஒரு சட்டத்தை அமைச்சரவையில் நிறைவேற்றுகிறார்கள்; மசோதாவை கொண்டு வருகிறார்கள்; அந்த மசோதாவை டிசைன் செய்வது மட்டும் தான் கேபினட். அந்த மசோதாவை வரைவு செய்வது மட்டும்தான் அமைச்சரவைக்கு உண்டு. அமைச்சரவையால் தயாரிக்கப்பட்ட எந்த பட்ஜெட்டோ, சட்டமோ அல்லது மசோதாவோ நாடாளுமன்ற ஒப்புதலுக்கு வர வேண்டும். நாடாளுமன்றம்தான் சுப்ரீம். ஜனநாயகத்தில் நாடாளுமன்றம்தான் உச்சபட்ச அமைப்பு. நாடாளுமன்றத்தை நான் கக்கத்தில் வைத்துக் கொள்கிறேன் என்று அமித் ஷா அவர்கள் காட்டிவிட்டார். தெரிந்தோ, தெரியாமலோ சபாநாயகர் அவர்கள் அதற்கு இடம் கொடுத்துவிட்டார். இதைவிட ஒரு கேலிக் கூத்து, ஒரு 'Mockery', ஜனநாயகத்தின் மீது விழுந்த கறை என்பது, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் விழுந்த கறை என்பது, நிச்சயமாக சுதந்திர இந்தியாவில் இருப்பதற்கான வாய்ப்பில்லை.

**கேள்வி:** இந்த மசோதாவை கொண்டு வராமல் தடுப்பதற்காக எதிர்க்கட்சிகள் அடுத்து என்ன செய்யப்போகிறீர்கள்?

**பதில்:** விவாதத்தில் அவர்கள் யார் என்பதை தோலுரிப்போம். 1995-இல் நரசிம்ம ராவ் காலத்தில் கொண்டுவரப்பட்ட சட்டத் திருத்தங்கள். இஸ்லாமியர்கள் சொத்துக்களுக்கு - வக்ஃப் வாரிய சொத்துக்களுக்கு போதுமான பாதுகாப்பு இல்லை என்பதற்காக, முறையாக விவாதித்து ஓட்டெடுப்பு நடத்தி 1995-இல் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டத்தை பலப்படுத்திய சில பிரிவுகள். அதற்குப் பிறகு, மன்மோகன் சிங் ஆட்சியில் 2013-இல் மேலும் செம்மைப்படுத்தப்பட்ட சில பிரிவுகள். இந்தப் பிரிவுகளை எல்லாம் ரகசியமாக - திருட்டுத்தனமாக சொல்லாமல், கொள்ளாமல் எடுப்பதற்கு ஒரு புது மசோதா. இதை கண்டுபிடிப்பதற்கே எனக்கு ஒரு மாதம் ஆகிவிட்டது. நான்தான் இதை முதன்முதலில் நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் சொன்னேன்.

நரசிம்ம ராவ் என்ன கொண்டுவந்தாரோ, மேம்படுத்தினார்களோ, செம்மைப்படுத்தினார்களோ - அந்தச் செம்மைப்படுத்தப்பட்ட பகுதிகளை நீக்குவதற்கு ஒரு சட்டம். இவ்வாறு நாடாளுமன்ற ஜனநாயகத்தில் இருந்ததே இல்லை. மேலும், மேலும் செம்மைப்படுத்த வேண்டும். மேலும், மேலும் சமூகம் வளர, வளர தேவைக்கு வளர, வளர... தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இருந்தது. அது போதாது என்றுதான், எஸ்.சி., எஸ்.டி. சட்டம் வந்தது. வரதட்சனை கொடுமை தடுப்பு சட்டம் இருந்தது. அதை செம்மைப்படுத்தினோம். சிறுபான்மை மக்களுக்கோ - தாழ்த்தப்பட்ட மக்களுக்கோ சட்டம் இயற்றும்போது, அதை மேலும் செம்மைப்படுத்த வேண்டுமே தவிர, இவர்கள் மீண்டும் 1954-க்கு செல்கிறார்கள். 1954 சட்டங்களை போட்டீர்கள் என்றால், ஆவணங்கள் இல்லாமல் 60 சதவீத வக்ஃப் வாரிய சொத்துக்கள் - இஸ்லாமியர்களுக்கு சொந்தமான சொத்துகள் அரசுடமை ஆக்கப்படும்.

### கூட்டுக் குழு!

**கேள்வி:** நாடாளுமன்றத்தில் ஒரு மசோதா தாக்கல் செய்யப்படுகிறது. அங்கு விவாதத்தில் ஒருமித்த கருத்து ஏற்படாது. இதில் பிரச்சினை இருக்கிறது என்பதனால்தான் கூட்டுக் குழுவிற்கு அனுப்புகிறார்கள். அந்தக் கூட்டுக் குழுவிலேயே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. உங்களுடைய கருத்துகள் எடுபடவில்லை. தன்னிச்சையாக அந்தக் குழுவின் தலைவர் ஒரு அறிக்கையை தயாரித்து, தாக்கல் செய்கிறார். அப்படியென்றால், அந்தக் கூட்டுக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை?

**பதில்:** இன்னும் நான் வெளிப்படையாக சொல்கிறேன். -ஆக இருந்தாலும், 2ஜி-ஆக இருந்தாலும், இந்தக் கூட்டுக் குழுவாக இருந்தாலும், பெரும்பான்மையை வைத்துதான் அந்தக் குழு தயாரிப்பார்கள். 2ஜி-யிலேயே எனக்கு எதிராகத்தான் கருத்து சொல்லப்பட்டது. ஸ்பெக்ட்ரம் வழங்கியதில் அரசாங்கத்திற்கு நஷ்டமில்லை. ஆனால், நடைமுறையில் சிக்கல் இருக்கிறது. இந்தக் கோப்புகளை வழங்கியதில் நடைமுறைச் சிக்கல் இருக்கிறது. அதில் தவறு இழைத்திருக்கிறார்கள் என்றுதான் நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் அறிக்கை இருந்தது. ...-இல் அவ்வாறுதான் இருந்தது.

அதுபோன்று அறிக்கை வருகிறபோது, 2ஜி-இல் எனக்கு எதிராக அறிக்கை இருந்தது. தேசத்திற்கு இழப்பில்லை; அரசாங்கத்திற்கு இழப்பில்லை; ஆனால், நடைமுறையில் சிக்கல் இருக்கிறது. கொடுத்த உரிமங்களில் சில சிக்கல்கள் இருக்கிறது; தகுதி இல்லாதவர்களுக்கு கொடுத்துவிட்டார்கள். இவ்வாறு, என்னை எதிர்த்து நாடாளுமன்ற கூட்டுக் குழு காங்கிரஸ் காலத்தில் கொடுத்தார்கள். ஆனால், என்ன என்றால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் டி.ஆர்.பாலு அவர்கள் எதிர் கருத்து கொடுத்தார்; நான் தனிப்பட்ட முறையில் எதிர் கருத்து கொடுத்தேன். இந்த இரண்டு எதிர் கருத்தும் புள்ளி, கம்மா மாறாமல் அப்படியே இருக்கிறது.

நான் இன்னும் சொல்கிறேன் பாருங்கள், இந்த 2ஜி வழக்கே நிர்வாகத்தை நடத்த தெரியாமல் நடத்தியதால்தான் வந்தது என்று என்னுடைய எதிர் கருத்தில் எழுதியிருக்கிறேன். அதை கூட எடுக்கவில்லை, அப்படியே இருக்கிறது. நான் என்ன சொல்கிறேன், நீங்கள் என்ன வேண்டும் என்றாலும் அறிக்கை கொடுங்கள். நாம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கலாம். ஆனால், நாங்கள் கொடுத்த எங்களுடைய எதிர் கருத்துரையை நீங்கள் ஏன் நீக்குகிறீர்கள்? என்ன அர்த்தம்? நான் நாளை உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கும்போது, நாங்கள் சொன்ன பகுதிகள் எல்லாம் இல்லை என்றால், உச்சநீதிமன்றத்தில் நீங்கள் ஏன் அங்கு சொல்லவில்லை என்று கேட்பார்கள் அல்லவா... நாடாளுமன்றக் கூட்டு குழுவில் இருந்தீர்களே திரு.ராஜா, நீங்கள் ஏன் இதை அங்கு பதிவு செய்யவில்லை என்று கேட்பார்கள் அல்லவா... நான் சொன்னேன் அவர்கள் கேட்கவில்லை என்று சொன்னால் நம்புவார்களா... இது 2ஜி உள்ளிட்ட இதற்கு முந்தைய எந்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவிலும் நடைபெறவில்லை. எதிர் கருத்துரை கொடுத்தால், அது எங்களுக்கு ஏற்புடையதில்லை; ஆனால், ராஜா கொடுத்திருக்கிறார். இதுதான் அவருடையது. புள்ளிகூட மாறாமல் வைப்பார்கள். ஆனால், இந்த முறைதான் நாங்கள் ஒரு அறிக்கை கொடுத்தால், என்னுடைய அறிக்கையில் 55 சதவீதத்தை எடுத்து விட்டார்கள். ஏன் பயந்து எடுக்கிறீர்கள்? இது ஜனநாயக விரோதச் செயல் இல்லையா... இப்படி ஒரு அயோக்கியத்தனத்தை எந்த அரசாங்கமும் செய்ததில்லை. இன்றைக்கு இந்த அரசாங்கம் செய்திருக்கிறது.

**கேள்வி:** நீங்கள் சொல்வதைப் பார்த்தால், நாடாளுமன்ற நடைமுறைகள், நாடாளுமன்ற விதிகளை அனைத்தையுமே இந்த அரசு மீறியிருக்கிறார்கள் என்று சொல்கிறீர்களா?

**பதில்:** குழி தோண்டி புதைத்து விட்டார்கள். இது சட்டமே இல்லாமல் ஒரு காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டிருக்கிறது. என்ன செய்ய முடியும்?

### ஒன்றியத்தில் காட்டாட்சி நடக்கிறது!

**கேள்வி:** இவ்வாறு இந்த விதிகள் எல்லாம் மீறி குழி தோண்டி புதைக்கிறார்கள் என்று சொல்வதற்கு என்ன காரணம்? இதனால் என்ன லாபத்தை அவர்கள் ஈட்டப் போகிறார்கள்?

**பதில்:** ஒன்றுமே இல்லை. இதை ஓட்டெடுப்பில் விட்டு, மிருக பலத்தை வைத்து நிறைவேற்றுவார்கள். சிறுபான்மை மக்களை இரண்டாம் நிலைக்கு கொண்டு செல்கிறார்கள். சிறுபான்மை மக்கள் வாயற்றவர்களாக, குரலற்றவர்களாக... நீங்கள் வாழ்வதற்கு நாங்கள் அனுமதி தருகிறோம். உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. நாங்கள் அனுமதித்தால் நீங்கள் வாழலாம். அதாவது, Second-Rate Citizen. இதை 'இந்து நாடு' என்று அறிவிக்கப்போகிறார்கள். இந்து நாட்டில் பிற்படுத்தப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளப்போகிறார்களா? மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களை ஏற்றுக் கொள்ளப்போகிறார்களா? இந்து என்ற பெயரால் உயர்ந்த ஜாதிக்காரர்கள் நாட்டை ஆள வேண்டும். அதற்கு, சிறுபான்மை மக்களை முடக்க வேண்டும். ஏற்கனவே, கிறிஸ்தவர்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து வெளிநாட்டு நிதிகளையும் முடக்கி விட்டார்கள். யாருக்கும் பாதுகாப்பு இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பாதுகாப்பு இல்லை. யாராவது ஒரு இறைச்சி கொண்டு சென்றால், மாட்டு இறைச்சி என்று அடிக்கிறார்கள். கேட்பதற்கு நாதி இல்லை. ஏற்கனவே, 25 சதவீதமாக இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் - 10 சதவீதமான இருக்கும் இஸ்லாமியர்கள் - 5 சதவீதமாக இருக்கும் கிறிஸ்தவர்கள் அனைத்தையும் சேர்த்து அடித்துவிட்டு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் எந்த உரிமையும் கொடுக்காமல் - அவர்களுக்கு கொடுக்கப்பட்ட இட ஒதுக்கீட்டையும் ஒழுங்காக நிறைவேற்றாமல் - எந்த விதமான ஒரு காட்டாட்சி நடக்கிறது. இவ்வாறு ஒரு மதவெறியல்லவா?

**கேள்வி:** நான்கு பேர் நான்கு விதமான கருத்துக்களை சொல்கிறார்கள்/ யார் தவறானவர்? யார் சரியானவர்?

**பதில்:** நான் அதிகமாக பயன்படுத்துகிறேன் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். நீங்கள் அருமையான கேள்வியை என்னிடம் கேட்கிறீர்கள். உள்துறை அமைச்சர் தவறு செய்திருக்கிறாரா? சபாநாயகர் தவறு செய்திருக்கிறாரா? நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் தவறு செய்திருக்கிறாரா? அவர் சேர்த்திருக்கிறாரா? என்று... நான் சொல்கிறேன், நான்கு பேருமே கூட்டுக் களவாணிகள்தான்.

### அரசியல் சட்டத்திற்கு முரணானது!

**கேள்வி:** Impeachment கொண்டு வர வேண்டும் என்றால் யார் மீது கொண்டு வரலாம்?

**பதில்:** Impeachment கொண்டு வர முடியாது. இதை நாங்கள் விவாதத்தில் வெளிப்படுத்துவோம். அவ்வாறு வெளிப்படுத்தி அனைத்தையும் ரெக்கார்ட் செய்து வைத்துக் கொண்டு, பெரும்பான்மை என்கிற பெயரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற இந்த வக்ஃப் வாரியச் சட்டம், அரசியல் சட்டத்திற்கு முரணானது என்பதை உச்சநீதிமன்றத்தில் நாங்கள் நிரூபிப்போம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் - எங்களுடைய முதலமைச்சர் அவர்கள், இன்னும் சொல்லப்போனால், இந்தியாவில் இருக்கும் அனைத்து இஸ்லாமிய தலைவர்களும் அவரோடுதான் தொடர்பில் இருக்கிறார்கள். அவரால்தான் செய்ய முடியும் என்று நினைக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு விடுத்திருக்கும் கட்டளை, என்ன விலை கொடுத்தாவது சிறுபான்மை மக்களின் உரிமைகளை காப்பாற்ற வேண்டும். அதற்கு நீங்கள் எந்த தூரத்திற்கு செல்ல முடியுமோ அவ்வளவு செல்லலாம் என்று உரிமை கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக இதை உச்சநீதிமன்றத்தில் நாங்கள் தடுத்து நிறுத்துவோம்.

### மீறப்படும் நாடாளுமன்ற மரபுகள்!

**கேள்வி:** நாடாளுமன்ற மரபுகள் இதன் மூலமாக மீறப்படுகிறது, தவிர்க்கப்படுகிறது என்று நாம் எடுத்துக் கொள்ளலாமா?

**பதில்:** மரபுகள் மீறப்பட்டால்கூட பரவாயில்லை. விதிகளையே தூக்கிப் போட்டுவிட்டார்கள். மரபு என்பது வேறு. மரபு என்பது ஒரு கலாச்சாரம். If it is voilated, there is no law to punish. ஆனால் விதிகளையே மீறி இருக்கிறார்களே. நான் 25 ஆண்டு காலமாக நாடாளுமன்றத்தில் இருக்கிறேன். எதிர்க்கட்சியாகவும் இருந்திருக்கிறேன். நானே ஒரு வழக்கைச் சந்தித்திருக்கிறேன். ஒரு நாடாளுமன்ற கூட்டுக் குழு இருந்திருக்கிறது. அந்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியும். ஆனால், இது போன்ற ஒரு காட்டுமிராண்டித்தனத்தை - இது போன்ற ஒரு எதாச்சதிகாரத்தை - இது போன்ற ஒரு சர்வாதிகாரத்தை, நான் பார்த்ததே இல்லை.

**கேள்வி:** நாடாளுமன்றக் கூட்டுக் குழு அமைக்கப்பட்டிருக்கவே வேண்டாம் என்ற ஒரு கேள்வி இதன் மூலம் எழுகிறதா?

**பதில்:** இல்லை, எங்களுக்கு நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கும்போதே தெரியும். ஆனால், இவ்வளவு மோசமாக நடந்து கொள்வார்கள் என்று நினைக்கவில்லை. அதாவது, தனக்கு வேண்டியது போன்று அறிக்கை கொண்டு வருவது வேறு. ஆனால், அந்த அறிக்கைக்கு உள்ள நடைமுறை விதிகளையே பின்பற்றாமல் கொண்டு வருவது என்பது வேறு. நடைமுறைச் சட்டத்தையே தூக்கிப் போட்டுவிட்டார்களே...

### தொடக்கம் முதலே தவறு!

**கேள்வி:** தவறான முறையில் ஒரு மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுகிறது என்பது இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறதா?

**பதில்:** நாங்கள் என்ன சொல்வோம் என்றால், தொடக்க முதலே தவறு என்பார்கள். நீங்கள் ஒரு சட்டத்தை it is ... என்றால் அது செல்லாது. ... என்றால், இது தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து அனைத்தும் தவறு. நாங்கள் என்ன சொல்கிறோம் என்றால், இந்த வக்ஃப் வாரிய சட்டம் என்பது, தொடக்கம் முதலே - நாடாளுமன்ற கூட்டுக் குழு அமைக்கப்பட்டதிலிருந்தே - வெளியே வந்ததிலிருந்து - நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்து நிறைவேற்றும் வரை தவறு என்று உச்சநீதிமன்றத்தில் சொல்வோம்.

**கேள்வி:** அரசியல் ரீதியாக எதிர்கட்சிகளின் குரல் ஒடுக்கப்படுகிறது என்று பரவலாக பேசிக் கொண்டிருக்கும்போது, இந்த மசோதாவை பார்க்கும்போது எதிர்க்கட்சி எம்.பி.க்களின் குரல்கள் நாடாளுமன்றத்தில் நெறிக்கப்படுகிறது, ஒடுக்கப்படுகிறதா?

**பதில்:** எங்கள் குரலை அவர்கள் ஒடுக்க முடியாது. நிச்சயமாக, நாங்கள் ஆக்கப்பூர்வமாகவும் - ஆணித்தரமாகவும் இந்த வாதத்தை வைப்போம். அதற்குப் பிறகும் எண்ணிக்கை அடிப்படையில் இவர்கள் - நாடாளுமன்றத்தில் அவர்களுக்கு மெஜாரிட்டி இருக்கிற அடிப்படையில் இந்தச் சட்டத்தை அவர்கள் நிச்சயமாக நிறைவேற்றுவார்கள். முடிவெடுத்து விட்டார்கள்.

எங்களுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை, உச்சநீதிமன்றத்தில் அரசியல் சட்டத்திற்கு எதிராக இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அரசியல் சட்டத்தில் இந்த அரசாங்கம் ஒரு மதச்சார்பற்ற அரசாங்கம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மதச்சார்பற்ற அரசாங்கம் என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட ஒரு அரசாங்கம், அதை மீறி இருக்கிறது. எனவே, அரசியல் சட்டம் மீறல் இருக்கிற காரணத்தினால் இந்தச் சட்டத்தை ரத்து செய்யுங்கள் என்று சொல்வோம். அதில் நாங்கள் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

இவ்வாறு ஆ.ராசா எம்.பி. பேட்டியளித்தார்.